<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 26.06.2019 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

1. மேட்டூர் நகராட்சியில் கணினி பிரிவு மற்றும் பிரிவு எழுத்தர்கள் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட பிரிண்டர்களுக்கு 2019–20ஆம் ஆண்டிற்கான தேவையான டோனர்கள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஜெராக்ஸ் மிசின்க்கு தேவையான டோனர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பிரின்டர் பெயர் | டோனர் பெயர் | தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | LBP 2900B | Q2612A | 3 Nos |
| 2 | canon 4750 | 278A | 25 Nos |
| 3 | LBP6030W | 285 X L | 6 Nos |
| 4 | Laser jet M202dw | 88 X L | 4 Nos |
| 5 | HP Laser Jet | P 3015 | 2 Nos |
| 6 | Ribbon dotmatric printer | – | 15 Nos |
| 7 | Xerox machine | – | 5 Nos |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.844/2019/இ1)**

**தீர்மான எண். 80 நாள். 26.06.2019**

அனுமதிக்கப்பட்டது.

2. மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.அ.ராஜேந்திரன், நகராட்சி பொறியாளர்(உதவி செயற் பொறியாளர்) அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.1893/2019/டி2 நாள்.18.06.2019ல் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவையில் பாதுகாப்பான நீர் வழங்கும் மற்றும் சுகாதாரம் பயிற்சிக்கு 26.06.2019 முதல் 28.06.2019 வரை பிரதி நிதியாக கலந்து கொண்டு பயிற்சி பெறவும், அதற்குண்டான தொகை ரூ.3000/- மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2169/2019/இ1)**

**தீர்மான எண். 81 நாள். 26.06.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

1) நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules)

2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>தேர்வுநிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2142/2017/சி1 )**

**தீர்மான எண். 82 நாள். 26.06.2019**
**ஒப்புதல் வழங்கப்படுகிறது**

4. மேட்டூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.வாஞ்சி அவர்கள் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட பணிக்கொடை வழக்கு எண்.46/2013 நாள்.12.08.2014 தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கும் சேலம் வழக்கறிஞர் திரு.T.C.சுரேஷ் அவர்களை மேற்படி மேல்முறையீடு வழக்கை மேட்டூர் நகராட்சி சார்பில் நடத்துவதற்கும் வழக்கறிஞர் திரு.T.C.சுரேஷ் அவர்களுக்கு ரூ.5000/- ஐ வழங்கவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. வருவாய் நிதியிலிருந்து தொகையை செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.47/2012/சி1)**

**தீர்மான எண். 83 நாள். 26.06.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

5. மேட்டூர் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.வாஞ்சி அவர்களுக்கு வழக்கு எண்.46/13 தீர்ப்பு நாள்.12.08.2014 மற்றும் W.P.No.649/16 மற்றும் WMP No.5772/5773 க்கு சட்ட கருத்துரு வழங்க கோரியதில் திரு.S.சரவணன் வழக்கறிஞர்

அவர்களின் அறிவுரையின்படி ரூ.1,52,392/-ஐ திரு வாஞ்சி, வருவாய் உதவியாளர் (ஓய்வு) அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், திரு.வாஞ்சி, வருவாய் உதவியாளர் (ஓய்வு) அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் அவமதிப்பு வழக்கு 702/19 நாள்.12.04.2019யில் சேலம், மாவட்ட ஆட்சித்தலைவர் மீது வழக்கு தொடர்ந்து தனக்கு வட்டி தொகை ரூ.98,000/- வழங்க கோரியிருந்தார் சென்னை, உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் அவர்களை நேரில் சென்று இது சம்மந்தமாக விபரம் கேட்டதற்கு தொகையினை தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் செலுத்தி மேல் முறையீடு தொடர தெரிவித்தார். எனவே ரூ.98,000/- மற்றும் ரூ.54,392/- துணை ஆணையர், தொழிலாளர் நல ஆணையம் சேலம், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.47/2012/சி1)**

**தீர்மான எண். 84 நாள். 26.06.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையர்
மேட்டூர் நகராட்சி